**Dominic Perrottet**
Premier of NSW

**Stuart Ayres**
Minister for Jobs, Investment, Tourism and Western Sydney

**Paul Toole**
Deputy Premier

**Brad Hazzard**
Minister for Health and Medical Research


NSW GOVERNMENT

# MEDIA RELEASE

செவ்வாய்க் கிழமை, 2 நவம்பர் 2021

## நியூ சவுத் வேல்ஸ் தொடர்ந்து தடுப்பூசிப் பணிகளை நிறைவேற்றுவதால், கதவுகள் திறக்கப்படுகின்றன

நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம், திட்டமிடப்பட்ட பல செயல்திட்ட மாற்றங்களை (roadmap changes) டிசம்பர் 1-ஆம் தேதியில் இருந்து, திங்கட் கிழமை, நவம்பர் 8-ஆம் தேதிக்கு முன்கூட்டியே கொண்டு வருவதன் மூலம், எதிர்பார்த்ததை விட வேகமான தடுப்பூசி விகிதத்திற்குப் பதிலளிக்கும் விதமாக, **முழுமையாகத் தடுப்பூசி போட்டவர்களுக்கான** விதிகளை மேலும் எளிதாக்கும்.

நவம்பர் 8-ஆம் தேதி முதல், வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு வரம்பு ஏதும் இருக்காது, 1,000 நபர்களுக்குக் குறைவாக மக்கள் கூடுகின்ற வெளிப்புறக் கூட்டங்களுக்கு எந்த விதிமுறைகளும் இல்லை, மேலும் அனைத்து நோக்கங்களுக்காகவும், உள்ளரங்கு நீச்சல் குளங்கள் (indoor swimming pools) மீண்டும் திறக்கப்படும்.

2 சதுர மீட்டருக்கு 1 நபர் என்ற விதிமுறைக்குத் திரும்பும் வகையில், அனைத்து வளாகங்களிலும், முழுமையாகத் தடுப்பூசி போட்டுள்ள வாடிக்கையாளர்களை வணிகங்கள் வரவேற்க முடியும், மேலும் இரவு விடுதிகள் (night clubs), நடன அரங்கங்களை (dancefloors) மீண்டும் திறக்க முடியும்.

உடற்பயிற்சி (gym) மற்றும் நடன வகுப்புகள் (வகுப்புகளில் 20 நபர்கள் என்ற உச்சவரம்பு இருக்கும்) தவிர, மற்ற அமைப்புகளுக்கு உச்சவரம்பு அகற்றப்பட்டு, (விளையாட்டரங்கங்கள் (stadiums), குதிரைப் பந்தயத் திடல்கள் (racecourses), கேளிக்கைப் பூங்காக்கள் (theme parks) மற்றும் மிருகக் காட்சி சாலைகள் (zoos) உள்ளிட்ட) முக்கிய பொழுதுபோக்கு வெளிப்புற வசதிகள் மற்றும் (திரையரங்குகள் (cinemas) மற்றும் நாடக அரங்குகள் (theatres) உள்ளிட்ட) பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை, ஆள்-அடர்த்தி வரம்புகள் அல்லது 100 சதவிகித நிலையான இருக்கை வசதிகளுக்கு மாற்றப்படும்.

மருத்துவ விதிவிலக்கு பெற்றவர்கள் மற்றும் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் உட்பட, **முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்தச் சுதந்திரங்கள் கிடைக்கும்.** கோவிட் பாதுகாப்பான உள்நுழைவுப் பதிவுகளும் (COVID Safe check-ins), தடுப்பூசி போடப்பட்டதற்கான ஆதாரமும் இப்போதும் தேவைப்படும்.

**95 சதவீத இரட்டைத் தடுப்பூசி இலக்கை மாநிலம் அடையும் வரை, அல்லது டிசம்பர் 15 வரை, இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை, முழுமையாகத் தடுப்பூசி போடாதவர்கள் முன்-செயல்திட்ட (pre-roadmap) வரையறைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.**

அனைவரும் முகக்கவசம் அணியவேண்டும் என்னும் தற்போதைய நடைமுறைகள், 95 சதவிகித இரட்டைத் தடுப்பூசி இலக்கை மாநிலம் அடையும் வரை, அல்லது டிசம்பர் 15 வரை, இதில் எது முதலில் வருகிறதோ, அதுவரை அப்படியே இருக்கும்.

சமூகம் முழுவதும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிக அளவில் பராமரிக்க, நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறையானது, 6 மாதங்கள் அல்லது அதற்கு முன்பு இரண்டாவது தவணை (second dose) கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்ற 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தனிநபர்களுக்கு, ஊக்க தடுப்பூசித் திட்டத்தை (booster vaccination program) அதன் மருத்துவ நிலையங்களில் அறிமுகப்படுத்தத் தொடங்கியுள்ளது. முதலாவது அல்லது இரண்டாவது தவணைக்குக் கொடுக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசி எதுவாக இருந்தாலும், ஊக்கமருந்துக்கு ஃபைசர் (Pfizer) பயன்படுத்தப்படும்.

மாநிலத்தின் அதிக தடுப்பூசி விகிதங்கள் (vaccination rates) மற்றும் ஊக்க ஊசிமருந்துகள் (booster shots) வெளிவருதல் போன்றவற்றால் மட்டுமே, கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதை முன்கூட்டியே கொண்டு வருவது சாத்தியமானது என்று முதல்வர் டொமினிக் பெரோட்டெட் (Dominic Perrottet) கூறினார்.

"நாங்கள் திட்டமிட்டதை விட முன்பாகவே, நியூ சவுத் வேல்ஸ் பாதுகாப்பான மற்றும் ஆலோசனையுடன் கூடிய வழியில் கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடியும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அனைவரும் அசாதாரணமான வேலையைச் செய்துள்ளனர்," என்று திரு பெரோட்டெட் (Mr Perrottet) கூறினார்.

“90 சதவிகித இரட்டைத் தடுப்பூசி வாரங்களை, திட்டமிட்டதை விட முன்னதாகவே அடைவதற்கான பாதையில் நாங்கள் இருக்கிறோம், மேலும், இது நியூ சவுத் வேல்ஸ் முழுவதும் உள்ள அனைவருக்கும், குறிப்பாக நமது சுகாதார ஊழியர்களுக்கு ஒரு நற்செய்தியாகும்.

"இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது, ஆனால் நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் சமூகத்திற்கு ஆதரவாய் இருக்கிறது, அத்துடன் நாங்கள் திறந்து விடும்போது, மக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஊக்க ஊசிமருந்துகள் (booster shots) உட்பட எங்களால் முடிந்த அனைத்தையும் அரசு தொடர்ந்து செய்து வருகிறது.”

துணை முதல்வர் பால் டூல் (Paul Toole) கூறுகையில், பிராந்திய நியூ சவுத் வேல்ஸ் தடுப்பூசிகளை எதிர்பார்த்துத் தயாராக இருந்தது, இப்போது நாங்கள் பார்வையாளர்களை மீண்டும் வரவேற்கத் தயாராக உள்ளோம்.

“தடுப்பூசி போட முன்வருமாறு நாங்கள் கேட்டபோது, நியூ சவுத் வேல்ஸ் முழுவதிலும் உள்ள பிராந்தியங்கள் அந்த அழைப்புக்குப் பதிலளித்தன. தடுப்பூசியைப் பெற வெளிவந்தமைக்கு அச்சமூகத்திற்கு நன்றி,” என்று திரு டூல் (Mr Toole) கூறினார்.

"பிராந்திய வணிகங்கள் (regional businesses), மாநிலம் முழுவதிலும் உள்ள ஒவ்வொரு நகரத்திலும், பார்வையாளர்களைப் பாதுகாப்பாகத் திரும்ப வரவேற்கவும், வருவாயைப் பெருக்கவும் இப்போதுதான் சரியான நேரம்."

90 சதவிகித இலக்கை எட்டுவது என்பது, மாநிலத்தை மீட்டெடுப்பதில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக (milestone) இருக்கும் என்று வேலைகள், முதலீடு, சுற்றுலா மற்றும் மேற்கு சிட்னி அமைச்சர் ஸ்டூவர்ட் அயர்ஸ் (Stuart Ayres) கூறினார்.

"தொற்றுநோய்க்கு முந்தைய நமது நடவடிக்கைகள் பலவற்றுக்குத் திரும்பும் நிலைக்கு, மிக மிக நெருக்கமாக நாம் வந்து கொண்டிருக்கிறோம், அத்துடன் இந்த சமீபத்திய கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது என்பது, தங்கள் வணிகத்தை மீண்டும் திறக்கவும், தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்தவும், மேலும் வாடிக்கையாளர்களை மீண்டும் வரவேற்கவும் தயாராக இருக்கும் நூற்றுக்கணக்கான வணிகங்களுக்கு வரவேற்கத்தக்க செய்தியாக இருக்கும்," என்று திரு. அயர்ஸ் (Mr Ayres) கூறினார்.

உலகிலேயே மிக அதிகமாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ள மக்கள்தொகைக் கணக்கில் நியூ சவுத் வேல்ஸ் உள்ளது என்றும், ஊக்க ஊசிமருந்துகளை வெளியிடுவது, அந்த நன்மையைத் தொடர்ந்து பராமரிக்கும் என்று சுகாதார அமைச்சர் பிராட் ஹஸார்ட் (Brad Hazzard) கூறினார்.

"தடுப்பூசிகள் விஷயத்தில், நாம் உலகின் மிகச்சிறந்தவர்களில் ஒன்றாக இருக்கிறோம், ஆனால் கோவிட் நோய்த்தொற்றானது, சமூகத்தில் தொடர்ந்து பரவும் என்பதை நாம் மறக்க முடியாது, மேலும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்" என்று திரு ஹஸார்ட் (Mr Hazzard) கூறினார்.

"நாம் முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு முக்கிய முன்னுரிமை ஊக்கமருந்துகள் (boosters) ஆகும், மேலும் கோவிட்-19 தடுப்பூசி வெளியீட்டில், நாம் காமன்வெல்த்துடன் தொடர்ந்து நெருக்கமாக பணியாற்றுகிறோம். இதுவரை தடுப்பூசி போட்டிராத எவரும், கூடிய விரைவில் முன்பதிவு செய்ய வேண்டுமென்பதை, நான் ஊக்குவிக்க விரும்புகிறேன்.”

90 சதவிகிதம் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பற்றிய கூடுதல் தகவல்கள் nsw.gov.au என்ற இணையதளத்தில் உள்ளன.

www.nsw.gov.au/covid-19/vaccination/get-vaccinated என்ற இணையதளத்தின் வழியாக, உங்கள் கோவிட்-19 தடுப்பூசி (COVID-19 vaccine) அல்லது உங்கள் ஊக்க ஊசிமருந்துக்கு (booster shot) முன்பதிவு செய்யலாம்.

**MEDIA: Ian Paterson | Premier | 0438 748 501**
**Ella Smith | Deputy Premier | 0428 745 348**
**Sophie Hull | Minister Ayres | 0447 583 756**
**Julie Garvey | Minister Hazzard | 0448 569 746**